**நாலந்தா இன்னோவேஷன் பள்ளி - கம்பம் | Mob.: 9842121539**

**திருப்புதல் தேர்வு – II ( 01)**

**வகுப்பு : பத்து** **தமிழ்** **மதிப்பெண்கள் : 100**
**தேதி : 28.02.2022** **நேரம் : 2.45 மணி**

**குறிப்பு : i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.**
**ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினவாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.**

**பகுதி – I ( மதிப்பெண்கள் 15 )**

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**i i) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15x1=15**

1.'உனதருளே பார்ப்பன் அடியேனே' – யாரிடம் யார் கூறியது?
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

2. மீன் இருப்பது நீரில்; தேன் இருப்பது --------------.
அ) கல்லில் ஆ) பூவில் இ) கல்வியில் ஈ) நீரில்

3. 'கங்குல் - என்பதன் பொருள்.
அ) சூரியன் ஆ) சந்திரன் இ) இரவு ஈ) பகல்

4. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா? என்று வழிப்போக்கர் கேட்டது ---------------- வினா.
"அதோ,அங்கே நிற்கும்." என்று மற்றொருவர் கூறியது ------------- விடை.
அ) ஐயவினா,வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா,மறைவிடை
இ) அறியா வினா,சுட்டு விடை ஈ) கொளல் வினா,இனமொழி விடை

5. 'எல்' – என்பதன் பொருள் என்ன?
அ) விண்மீன் ஆ) கோள்கள் இ) சூரியன் ஈ) சந்திரன்

6. வெயிலில் அலையாதே; உடல் --------------.
அ) வெந்துவிடும் ஆ) சிவந்துவிடும் இ) கருத்துவிடும்

7. 'தால்' என்பதன் பொருள் ---------.
அ) மூக்கு ஆ) இதழ் இ) நாக்கு ஈ) அழகு

8. மக்களைப் போலவே இருப்பவர் ----------- என்று வள்ளுவர் கூறுகிறார்.
ஆ) தேவர் ஆ) கயவர் இ) கஞ்சர் ஈ) கல்லாதவர்

9. "ஏழைமை வேடன் இறந்திலன்" - இக்கூற்றுக்கு உரியவர் -------------.
அ) குகன் ஆ) அனுமன் இ) இராமன் ஈ) இலக்குவன்

10. 'அறன்' - இலக்கணக்குறிப்பு தருக.
அ) முற்றும்மை ஆ) முதற்போலி இ) கடைப்போலி ஈ) இடைப்போலி

11. வினா எத்தனை வகைப்படும்?
அ) ஐந்து ஆ) ஆறு இ) ஏழு ஈ) எட்டு

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.**

**"அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி**
**மருளை அகற்றி மதிக்கும் தெருளை**
**அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்**
**பொருத்துவதும் கல்வியென்றே போற்று"**

12. பாடல் இடம்பெற்ற நூல் ----------.
அ) நீதிவெண்பா ஆ) புறநானூறு இ) வெற்றி வேட்கை ஈ) கொன்றை வேந்தன்

13. பாடலின் சீர் மோனைச் சொற்கள் ------------.
அ) அருளை,அருத்துவதும் ஆ) அருளை,அறிவை
இ) அகற்றி,அருந்துணையாய் ஈ) அறிவை,அகற்றி

14. அருந்துணை - இலக்கணக்குறிப்பு தருக.
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) வேற்றுமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

15. உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது.
அ) அன்பு ஆ) கல்வி இ) மயக்கம் ஈ) செல்வம்

## பகுதி - II (மதிப்பெண்கள் 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். 4x2=8**

**21 – ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.
17. கம்பர் இயற்றிய நூல்களுள் எவையேனும் நான்கின் பெயர்களை எழுதுக.
18. 'கரப்பிடும்பை இல்லார்' - இத்தொடரின் பொருளை வள்ளுவர் வழி நின்று கூறுக.
19. **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க**.
அ) சதம் என்றால் நூறு என்று பொருள்.
ஆ) கம்பராமாயணப் பாடல்கள் சந்தநயம் மிக்கவை
20. சதாவதானம் என்றால் என்ன?
21. 'செயல்' – என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். 5x2=10**

22. வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.
அ) எல்லா பறவைகளுக்கும் காது உண்டு.
ஆ) பறவைகளுக்கு பார்த்தல்,கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்று இருக்கும்.
23. இந்த அறை இருட்டாக இருக்கிறது மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? இதோ… இருக்கிறது! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா,இல்லையா? – மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.
24. கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.
அ) அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார்.
ஆ) செல்வன் இளவேலன் இந்தச் சிறுவயதிலேயே விளையாட்டுத்துறையில் சாதனை புரிந்திருக்கிறார்.

25. செய்க – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

26. தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.

அ) அக்கா நேற்று வீட்டுக்கு வந்தது. அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. ( வழுவை வழாநிலையாக மாற்றுக )

ஆ) தந்தை, " மகனே! நாளை உன்னுடைய தோழன் அழகனை அழைத்து வா?" என்று சொன்னார். (ஆண்பாற்பெயர்களைப் பெண்பாலாக மாற்றுக)

27. தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.

அ) வானம் ---------------- தொடங்கியது. மழைவரும் போலிருக்கிறது.

ஆ) ----------------- மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.

28. கலைச்சொற்களை எழுதுக.

அ) Chamber ஆ) Myth

## பகுதி - III (மதிப்பெண்கள் 18)

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2x3=6**

29. தமிழர் மருத்துவமுறையைப் பற்றி எழுதுக.

30. கா.ப செய்குதம்பிப் பாவலர் - குறிப்பு வரைக.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பருப்பொருள்கள் சிதறுதடபடியாகப் பல ஊழிகாலங்கள் கடந்து சென்றன. புவி உருவான போது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் முதலில் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. குாலமாற்றத்தால் உயிர்கள் வாழ்வாதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

அ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?

ஆ) பெய்த மழை - இலக்கணக் குறிப்புத் தருக.

இ) ஊழி – பொருள் தருக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2x3=6**

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்திகளை விளக்குக.

33. வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள் வழி விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) "வாளால்" – எனத்தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல்

**அல்லது**

ஆ) "தண்டலை மயில்களாட" – எனத் தொடங்கும் கம்பராமாயணம் பாடல்.

பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2x3=6**

35. "குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு" - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

36. வினா வகையையும் விடை வகையையும் சுட்டுக.

அ) "காமராசர் நகர் எங்கே இருக்கிறது? "இந்த வழியாகச் செல்லுங்கள்." – என்று விடையளிப்பது.

ஆ) "எனக்கு எழுதித் தருகிறாயா?" என்ற வினாவுக்கு, "எனக்கு யார் எழுதித் தருவார்கள்?" – என்று விடையளிப்பது.

37. கொண்டுகூட்டுப் பொருள்கோளினை விளக்கி, எடுத்துக்காட்டு ஒன்று தருக.

**பகுதி - IV (மதிப்பெண்கள் 25)** **5x5=25**

38. அ) எதிர்காலத்தில் நீங்கள் பயில விரும்பும் கல்வி குறித்து எழுதுக.

**அல்லது**

ஆ) கம்பராமாயணக் கதைமாந்தருள் எவரேனும் ஒருவர் குறித்து எழுதுக.

39. "பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்" – குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றை உருவாக்கித் தலைமை ஆசிரியரின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்துக.

40. காட்சியைக் கண்டு கவினுற கவிதை ஒன்று எழுதுக.

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



41. கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்க.

42. அ) பள்ளியில் நான், வீட்டில் நான் - என்னும் தலைப்புகளில் நீங்கள், பள்ளியிலும் வீட்டிலும் நடந்துகொள்ளும் முறைகள் ஐந்தினைப் பட்டியலிடுக.

**அல்லது**

**ஆ) மொழிபெயர்க்க.**

Malar: Devi, switch off the lights when the room.

Devi: Yeah. We have to save electricity.

Malar: Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.

Devi: Who knows? In future or country may launch artificial moons to light our night time Sky!

Malar: I have read some other countries are going to launch these types of Illumination satellites near future.

Devi: Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power!

## பகுதி - V (மதிப்பெண்கள் 24) 3x8=24

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க**

43. அ) நயம் பாராட்டுக.

“நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ?

- பாரதியார்

**அல்லது**

ஆ) தமிழர் மருத்துவமுறைக்கும் நவீன மருத்துவமுறைக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.

44. “விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்” – என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

45. அ) பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / / சிறுகதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

**குறிப்பு:** நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் - மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு – சிறப்புக் கூறு – நூல் ஆசிரியர்.

**அல்லது**

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்ற வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

***************

தயாரித்தவர்:
திருமதி ராதிகா எம்.ஏ.,பி.எட்.
நாலந்தா இன்னோவேஷன் பள்ளி
கம்பம் - தேனி மவட்டம்
தமிழ்நாடு

தொடர்புக்கு: 9842121539